# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

எத்தனையோ மேடைகளில் நான் பதிவு செய்திருக்கிறேன். உங்களுக்கான பாதுகாப்பு அரணாக மட்டுமில்லை, உங்களுக்கான உரிமைகளையும், சலுகைகளையும் வழங்குவதில், திராவிட முன்னேற்றக் கழக அரசுதான், என்றைக்கும் முதன்மையான அரசாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

கடந்த நான்காண்டுகளில், சிறுபான்மை யின மக்களுடைய சமூக - பொருளாதார, கல்வி நிலைகளை மேம்படுத்துவதற்காக ஏராளமான திட்டங்களை, சாதனைகளை படைத்திருக்கிறோம்.

அண்மையில்கூட, நங்கநல்லூரில் 'தமிழ்நாடு ஹஜ் இல்லம்' கட்டப்படும் என்று அறிவித்தேன். பலரும் என்னிடம் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்கள்.

**இஸ்லாமிய மக்களுக்காக என்றும் குரல் கொடுக்கும் கழகம்!**

இதேபோல், நம்முடைய திராவிட மாடல் அரசில் ஏராளமான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து, இசுலாமிய மக்களின் உரிமைகளை காக்க குரல் கொடுத்து வரக்கூடிய இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

அதே நம்பிக்கையுடன் தான் நீங்களும் சில கோரிக்கைகளை இந்த மாநாட்டுமூலமாக, தீர்மானங்களாக வடித்தெடுத்து சொல்லியிருக்கிறீர்கள். அதுவும் என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது.

முதல் அறிவிப்பு - திருநெல்வேலி மாவட்டத்தில் மாபெரும் நூலகம் அமைக்கப்படும் என்று ஏற்கனவே நிதிநிலை அறிக்கையில் சட்டமன்றத்தில் நான் அறிவித்திருக்கிறேன். அந்த நூலகத்திற்கு கண்ணியத்திற்குரிய காயித மில்லத் அவர்கள் பெயர் சூட்டப்படும்.

இரண்டாவது அறிவிப்பு - சென்னைப் பல்கலைக் கழகத்தில், இசுலாமிய தமிழ் இலக்கிய ஆய்வு இருக்கையை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி தரவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். இந்த கோரிக்கையை ஏற்று இதை அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

1973-ல் இருந்து இதுவரைக்கும் எட்டு மாநாடுகள் நடத்தி, முடித்து, இப்போது ஒன்பதாவது மாநாட்டை நான் தொடங்கி வைத்திருக்கிறேன்.

தலைவர் கலைஞர்தான் முத்தமிழறிஞர்! முத்தமிழ் வித்தகர்!

ஆனால், நான், முத்தமிழின் சுவையையும் ரசிக்கக்கூடியவன் நான்,

ஒரு ரசிகனாக இருக்கக்கூடியவன் நான்!

நான் பெரிதும் ரசித்த, கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் பெயரை இந்த அரங்கத்திற்கு சூட்டியிருக்கிறீர்கள். அவர் மறையவில்லை. தன்னுடைய தமிழ்க் கவிதைகளால் என்றைக்கும் நம்மோடு வாழ்ந்துகொண்டு இருப்பார் என்பதற்கு அடையாளம்தான் இது!

**தலைவர் கலைஞர் பாராட்டிய கவிக்கோ அப்துல் ரகுமான்!**

கவிக்கோ என்றதும் தலைவர் கலைஞர் சொன்னதுதான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது... "வெகுமானம் எதுவேண்டும் என்று கேட்டால், அப்துல் ரகுமானை தான் கேட்பேன்" என்று தலைவர் கலைஞர் சொன்னார்! இதைவிட பெரிய பாராட்டு நிச்சயமாக இருக்க முடியாது! அப்படிப்பட்ட கவிக்கோ அவர்களுடைய நூல்களைதான், சில நாட்களுக்கு முன்னால், நாட்டுடைமையாக்கி, அவரது குடும்பத்திற்கு, பத்து இலட்சம் ரூபாய் நிதி வழங்கியிருக்கிறோம். அவரது பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாட ஆணையிட்டிருக்கிறோம்!

அதேபோல், தி.மு.க.வினருடைய நெஞ்சிலும் தினமும் ஒலித்து கொண்டு இருக்கும் குரலுக்குச் சொந்தக்காரர், 'இசைமுரசு' நாகூர் ஹனிபா அவர்கள்!

அவரது நூற்றாண்டு பிறந்த நாளையும், அறிவியல் தமிழ் அறிஞரான மணவை முஸ்தபா பிறந்த நாளையும் அரசு விழாவாக கொண்டாட ஆணையிட்டிருக்கிறோம்!

**இஸ்லாமிய இலக்கிய பெருமக்களின் தமிழ்த் தொண்டு!**

இப்படி, "இசுலாம் எங்கள் வழி - இன்பத் தமிழ் எங்கள் மொழி" என்று வாழ்ந்த பெருமக்கள் தமிழ்நாட்டில் அதிகம்!

- சிந்தையள்ளும் 'சீறாபுராணம்' தந்த உமறுப்புலவர்
- புலவர்களுக்கு கொடுப்பதையே கடமையாக கருதிய வள்ளல் சீதக்காதி
- செய்குத் தம்பி பாவலர்
- குணங்குடி மஸ்தான் சாகிபு
- கவி கா.மு.ஷெரீப்
- நீதியரசர் எம்.எம்.இஸ்மாயில் - இப்படி பல்வேறு இசுலாமிய இலக்கியப் பெருமக்கள் தமிழுக்குத் தொண்டாற்றி இருக்கிறார்கள். இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு என்று 9 நூற்றாண்டு கால வரலாறு இருக்கிறது!

'இணைப்பே இலக்கியம்' என்பதை இந்த மாநாட்டின் நோக்கமாக வைத்திருக்கிறீர்கள்!

இந்தக் காலத்திற்கு தேவையான இணைப்புதான். இலக்கியத்திற்கு மட்டுமல்ல, இதயங்களுக்கும் தேவையான இணைப்புதான்! இப்படிப்பட்ட இணைப்பை, இலக்கியங்களும் இதுபோன்ற இலக்கிய மாநாடுகள் உருவாக்கவேண்டும்! நிச்சயம் உருவாக்கும் என்று நான் நம்புகிறேன்!

தமிழ் நம்மை இணைக்கும்! இலக்கியம் நம்மை இணைக்கும்! எனவே, தமிழால் நாம் இணைவோம்! தமிழர்களாய் நாம் இணைவோம்! இதயங்களால் இணைவோம்! என்று கூறி, அய்யா காதர்மொய்தீன் உள்ளிட்ட விருதாளர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# நாமக்கல் மேற்கு மாவட்டம்

## திருச்செங்கோடு வடக்கு - திருச்செங்கோடு தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் திருச்செங்கோடு கிழக்கு - திருச்செங்கோடு மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் - ஒன்றிய, நகரக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட, **திருச்செங்கோடு ஒன்றியம், திருச்செங்கோடு வடக்கு, திருச்செங்கோடு தெற்கு** ஆகிய 2 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவதோடு;

திருச்செங்கோடு நகரம் **திருச்செங்கோடு கிழக்கு, திருச்செங்கோடு மேற்கு** ஆகிய 2 நகரக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட நகரங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **திருச்செங்கோடு வடக்கு, திருச்செங்கோடு தெற்கு** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாகவும் - **திருச்செங்கோடு கிழக்கு, திருச்செங்கோடு மேற்கு** ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாகவும் அமையும்.

**திருச்செங்கோடு வடக்கு ஒன்றியம்:** 1. டி.கைலாசம்பாளையம், 2.டி.புதுப்பாளையம், 3. சித்தாளந்தூர், 4. தேவனாங்குறிச்சி, 5.கருமாபுரம், 6. திருமங்கலம், 7. கருவேப்பம்பட்டி, 8. புதுபுளியம்பட்டி, 9. ஒ.இராஜாபாளையம், 10. தோக்கவாடி, 11. டி.கவுண்டம்பாளையம், 12.வரகூராம்பட்டி, 13. வட்டூர் ஆகிய 13 ஊராட்சிகள்.

**திருச்செங்கோடு தெற்கு ஒன்றியம்:** 1. ஆண்டிபாளையம், 2. அனிமூர், 3. சிறுமொளசி, 4. ஏ.இறையமங்கலம், 5. எஸ்.இறையமங்கலம், 6. பிரிதி, 7. ஏமப்பள்ளி, 8. மொளசி, 9. சிக்கநாய்க்கன்பாளையம், 10. பட்லூர், ஆகிய 10 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **திருச்செங்கோடு வடக்கு, திருச்செங்கோடு தெற்கு** கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருச்செங்கோடு வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : ஜி.தங்கவேல், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

**திருச்செங்கோடு தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : தாமரைச்செல்வன், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

**திருச்செங்கோடு கிழக்கு நகரம் :** 1, 2, 3, 4, 5, 6, 11, 12, 13, 14, 15, 16, 25, 26, 27, 32, 33 ஆகிய 17 வார்டுகள்.

**திருச்செங்கோடு மேற்கு நகரம் :** 7, 8, 9, 10, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 28, 29, 30, 31 ஆகிய 16 வார்டுகள்.

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **திருச்செங்கோடு கிழக்கு, திருச்செங்கோடு மேற்கு** ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருச்செங்கோடு கிழக்கு நகரம்:** பொறுப்பாளர் : டி. கார்த்திகேயன், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

**திருச்செங்கோடு மேற்கு நகரம்:** பொறுப்பாளர் : ஆர். நடேசன், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

**பள்ளிபாளையம் மத்திய ஒன்றியம்**

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் ஏற்கனவே வெளியிடப்பட்ட நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் செய்யப்படுகிறது.

நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **ஆனங்கூர், தண்ணீர் பந்தல்பாளையம், மோடமங்கலம் ஆகிய 3 ஊராட்சிகள் பள்ளிபாளையம் மத்திய ஒன்றியத்தில்** செயல்படும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 09.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## மாநில சுயாட்சி நாயகர் – முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு விழா!

# மும்பை தி.மு.க. சார்பில் - பாவேந்தர் பிறந்த நாள் விழா!

## பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமை! சு.குமணராசன் சிறப்புரை!

*மும்பை, மே. 11-*

மும்பை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், திராவிட கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களின் 134வது பிறந்தநாள் விழா மற்றும் அவரது பிறந்த நாளை உலகத் தமிழ் வாரமாக அறிவித்த மாநில சுயாட்சி நாயகர், நமது உரிமையினை மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் மூலம் போராடிப் பெற்றுத் தந்த கழகத் தலைவருக்கு நன்றி பாராட்டும் விழா, இன்று (11.05.2025 ஞாயிறு) இரவு 7 மணிக்கு மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் தாராவியில் உள்ள கலைஞர் மாளிகையில் நடைபெறுகிறது.

பொறுப்புக்குழு உறுப்பினர். ம.நீதிதுரை வரவேற்புரையாற்ற பொறுப்புக்குழு உறுப்பினர்கள் க.மு. மாணிக்கம், அன்பழகன் பொற்கோ, மாறன் ஆரிய சங்காரன், ம.உத்தமன், ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

பாவேந்தர் பாரதிதாசனார் படத்தை பம்பாய் திருவள்ளுவர் மன்றம் மற்றும் கலைஞர் தமிழ்ச் சங்கச் செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன் திறந்து வைக்கிறார்

மும்பை இலெமுரியா அறக்கட்டளை நிறுவுனர், தலைவர் சு.குமணராசன் சிறப்புரையாற்றுகிறார்.

மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், மராத்திய மாநில விசிக அமைப்புச் செயலாளர் சாலமோன் ராசா, மும்பை பகுத்தறிவாளர் கழகம் தலைவர் அ.ரவிச்சந்திரன் மற்றும் ஜான் சாமுவேல், இரா.பழனிசாமி, ஆ.பாலசுப்பிரமணியன், என். வி.சண்முகராசன், எஸ்.அரிராம்சேட், இரா.மதியழகன், களந்தை சண்முகவேலு, எஸ்.பி.செழியன், மா.கருண், கே.ஏ.ஜாகீர் உசைன், கி. தனுஸ்கோடி, இரா.காந்தி, அப்துல் திவான் மைதீன், வே.ரவிச்சந்திரன், சேரை ச.பிரகாஸ், சேலம் மா.சீனிவாசன், பி.இராமையா, எம்.ராஜன் (Rdo), தே. ஸ்டீபன், சுப.காளிமுத்து, ச.பெரியார் பாலா,அ.கண்ணன், சங்கர் திராவிட், தே.பொற்செழியன் எம். ராஜேந்திரன், க.வரத ராஜன், பொன்.சுப்பிரமணியன், ப.மாரிமுத்து, பொய்சர் க.மூர்த்தி, குப்பன், பி.எஸ்.அழகுராஜா ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.

தாராவி தி.மு.க. பிரமுகர் ஆர்.ரவிராஜினி நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் கழகத்தினரும் தமிழார்வலர்களும் பெருமளவில் பங்கேற்றுச் சிறப்பித்திடுமாறு மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு கேட்டுக்கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன்பேத்தி இரா.சுந்தரராஜன்
### மே 11 (2015)



**புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஒன்றியம், பொன்பேத்தியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**ஆவுடையார்கோவில் ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**ஆவுடையார்கோவில் ஒன்றியப் பெருந்தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டதுடன், நெருக்கடி மிசாவில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை! மேயர் சே.முத்துத்துரை முன்னிலை! துணை மேயர் நா.குணசேகரன் வரவேற்புரை!

# காரைக்குடி மாநகர் தி.மு.க. சார்பில் - சாதனை விளக்கப் பொதுக் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – கே.சி.உதயகுமார் – கு.சுமித்ரா – பா.கணேசன் சிறப்புரை!

*காரைக்குடி, மே.11-*

சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி மாநகரில் "நாடு போற்றும் நான்காண்டு- தொடரட்டும் பல்லாண்டு" கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம், மாநகர் தி.மு.க. சார்பில் நடைபெறுகிறது.

நாளை (12.5.2025 - திங்கட்கிழமை) மாலை 5.00 மணியளவில், காரைக்குடி - ஐந்து விளக்கு அருகில் நடைபெறும் இப்பொதுக் கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை வகிக்கிறார்.

மேயர் சே.முத்துத்துரை முன்னிலை வகிக்கிறார்.

துணை மேயர் நா.குணசேகரன் வரவேற்றுப் பேசுகிறார்.

அமைச்சர் - மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன், சூரியூர் கே.சி. உதயகுமார், கு.சுமித்ரா, பா.கணேசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் அ.கணேசன், த.சேங்கைமாறன், ஜோன்ஸ் ரூசோ, சுப. துரைராஜ், அ.முகமது, பா. செந்தில் குமார், டாக்டர் குமரேசன்,

சன். சுப்பையா, தி.செந்தில்குமார், இரா.கோ. அரசு உதயம் ராசு லெட்சுமிராஜ் கணேஷ், பெரி. வயிரவன், சே.சொக்க லிங்கம், போஸ்.குணசேகரன், ஏ.சேவியர், குழ.ஜான் கென்னடி,

கரு.அசோகன், கே. எஸ்.ரவி, தெய்வானை இளமாறன், ஆதி.கண்ணத்தாள்,

இராம.அன்பழகன், கதி.ராஜ்குமார், ஹேமலதா செந்தில், எம்.சசிவர்ணன், திவ்யா சக்தி,ஆர். ராஜபாண்டியன், மெ. பழனியப்பன், துரைநாகராஜ், காரை சுரேசு, எஸ்.மைக்கேல், கலா காசிநாதன், சுப.ஹரிதாஸ், மு.பிரசன்னா, இராம.சீனிவாசன், டி.முருகேசன், எம்.ரவி, எஸ்.ராமனாதன், பி.பாண்டிசெல்வம், ஜான் பீட்டர், சாய் சுரேஷ், சொ.கருப்பையா, எஸ்.பிரபாவதி, வெ.சுப்பிரமணியன், ருக்மா, சரவணன், ஆட்டோ எம். கிட்டு, பரணி கிட்டு அபி (எ) அப்ரஹாம் எஸ்.சேவியர், முகம்மது சேட், ஆர். பாண்டியராசன், சுப.சிதம்பரம், கே.பி.பிரபு, கண்டதேவி அசோக், என்.சேவுகன், பி.ஜெபத்துரை, எம். கிட்டு அழகர் உள்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

சொ.கண்ணன் நன்றி கூறுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செ. கந்தப்பன்
### மே 11 (1990)



**கழக கொள்கை விளக்க அணிச் செயலாளராகவும், இருமுறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். இவர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவராக ஐந்தாண்டு காலம் பணியாற்றியபோதுதான் கிராமங்கள்தோறும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டன.**

**1965ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போரில் பங்கேற்று சிறை சென்றார். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**"ஆழ்ந்த அரசியல் ஞானமும், அப்பழுக்கற்ற கொள்கை உறுதியும், கழகம் காப்பதில் கடமை உணர்வும் என்னை "அண்ணே" என்று அழைக்கும்போது ஒரு வற்றாத பாசமும் – கந்தப்பனை நமது கழகத்துக்கு அடையாளம் காட்டும் அழியாத சான்றுகளாகும்" என தலைவர் கலைஞர் குறிப்பிட்டு போற்றியுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**